செ.வெ.எண்: 454 நாள்: 22.07.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் 66 பணிகள் ரூ.20.27 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது.**

**பின்னங்குடிப்பட்டியில் குடிமராமத்து திட்டப் பணிகளை துவக்கி வைத்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதியில் நீர்வள ஆதாரத்துறையின் சார்பில் குடிமராமத்து திட்டப் பணியினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (22.07.2019) துவக்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளித்து போர்க்கால அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள். அந்தவகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏரி, குளங்களை தூர்வாரும் வகையில் குடிமராமத்து திட்டம் என்ற சிறப்பான திட்டத்தினை செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டத்தின் கீழ் கண்மாய்கள், அணைக்கட்டுகள், வரத்து வாய்க்கால்களை தூர் வாருதல், பழுதடைந்த கட்டுமானங்களை புதுப்பித்தல், அடைப்புப் பலகைகளை புதுப்பித்தல் மற்றும் கரைகளை பலப்படுத்துதல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும் இப்பணிகள் அந்தந்த கண்மாய்களில் பதிவு செய்யப்பட்ட பாசனதாரர்கள் சங்கம் மூலமாக மேற்கொள்ளப்பட உள்ளது.

அதனடிப்படையில் இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், பரம்பூர் ஊராட்சி, பின்னங்குடிப்பட்டியில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூ.36 இலட்சம் மதிப்பீட்டில் பெரிய குளம் தூர் வாரும் பணி துவக்கி வைத்து பார்வையிடப்பட்டது.

மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் தெற்கு வெள்ளாறு வடிநில கோட்டத்தின் மூலம் 59 பணிகள் ரூ.17.91 கோடி மதிப்பீட்டிலும், தஞ்சை கல்லணைக் கால்வாய் கோட்டம் மூலம் 4 பணிகள் ரூ.1.88 கோடி மதிப்பீட்டிலும், பட்டுக்கோட்டை அக்னியாறு வடிநில கோட்டத்தின் மூலம் 3 பணிகள் ரூ.48 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் 66 பணிகள் ரூ.20.27 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது. இதுவரை 59 பணிகள் துவக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

இப்பணிகளை முறையாகவும், தரமாகவும் மேற்கொள்ளவும், மேலும் மழைக்காலத்திற்கு முன்பாகவே பணிகளை முடிக்கவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே இக்குடிமராமத்து திட்டப் பணிகளை பாசனதாரர் சங்கங்கள் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆவின் பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கத்தலைவர் திரு.எஸ்.பழனியாண்டி, நீர்வள ஆதாரத்துறை செயற்பொறியாளர் சரவணன், உதவிப்பொறியாளர் உமாசங்கர், கூட்டுறவு சங்கத் தலைவர் வி.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் பி.சாம்பசிவம் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**